# நெடுந்தீவிலுள்ள ஒல்லாந்தர் கால தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள்: ஒரு ஆவணப்படுத்தல்

**Varunrajh P.**[1]

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் நாகரீக வரலாறானது தென்னிந்தியாவைப் போன்றே பெருங்கற்காலப் பண்பாட்டுவழி சமுதாயத்தின் மூலமே இலங்கைத்தீவு முழுவதும் ஒரு நிலையான சமுதாயக் கட்டமைப்பையுடைய நாகரீக வரலாறு வளர்ச்சியடைந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நெடுந்தீவானது யாழ்குடாநாட்டின் சப்ததீவுகளில் முக்கியத்தும்பெற்றதாகவும் வட இலங்கையின் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த நிர்வாக, வர்த்தக மையமாகவும் தனது அமைவிட காரணிகளாலும் பௌதீகச் செல்வாக்கினாலும் ஆதிகாலந்தொட்டு இன்றுவரை மக்கள் வாழ்ந்துவரும் தீவாகக் காணப்படுகிறது. இதனால்தான் நெடுந்தீவானது நீண்டதீவு மட்டுமல்ல அதற்கொரு நீண்ட பாரம்பரிய வரலாற்றையும் கொண்டுள்ளது என்பதனை அங்கு சிதைவுறும் நிலையில் காணப்படும் தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. நெடுந்தீவைப் பற்றி ஒழுங்காக ஆவணப்படுத்தப்பட்ட இலக்கியங்கள் அரிதாகவே காணப்படுகிறது. அவ்வாறே தொல்லியல் ஆய்வும் இங்கு முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால், இலக்கியங்களை எழுதுபவர்களும் அங்கு மக்கள் மத்தியில் காணப்படுகின்ற ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்டே வரலாறு எழுத வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் ஒரு பாரம்பரிய வரலாற்றின் உண்மைத் தன்மை ஐரோப்பியராட்சி நெடுந்தீவில் ஏற்படும் வரை புகைபடர்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. ஐரோப்பியர் ஆட்சி நெடுந்தீவில் இடம் பெற்று இற்றைக்கு 400 ஆண்டுகளைக் கடந்துள்ள போதும் அவர்களால் அமைக்கப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள் அழிவடைந்தாலும் ஐரோப்பியரது வரலாற்றை தெட்டத்தெளிவாக வெளிச்சமூட்டுகின்றது. குறிப்பாக ஐரோப்பிய ஆட்சியாளர்களில் ஒல்லாந்தரது வரலாற்று நினைவுச் சின்னங்களே அத்தீவெங்கும் பரந்து காணப்படுவதோடு பார்ப்பவர்களையும் கவர்வதாக உள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் நெடுந்தீவு பெற்ற முக்கியத்துவத்தினால் இத்தீவிற்கே உரிய சில மரபுரிமைச் சின்னங்களை கட்டமைத்துவிட்டு சென்றாலும் அவை இன்றும் மக்களால் பேணப்பட்டே வருகின்றது. குறிப்பாக குதிரை, அவற்றுடன் தொடர்புடைய குதிரைலாயம், மூலிகை மருத்துவக்கேணி, பெருக்குமரம், புறாக்கூடு, குவிந்தா வெளிச்சவீடு, வைத்தியசாலை, படைவீரர்கள் மனை போன்றன குறிப்பிடத்தக்கதாகும். இம்மரபுரிமைச் சின்னங்கள் முழுமையாக ஒல்லாந்தரது கலைப்பாணியையும் தொழிநுட்ப அறிவையும் பிரதிபலிப்பதாகவே உள்ளன. இன்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவிற்கு அதிகளவில் வருகைதர காரணம் ஒல்லாந்தரது மரபுரிமைச் சின்னங்களை பார்வையிடும் நோக்கிலேயாகும். இவர்களால் கொண்டுவரப்பட்ட குதிரைகள் இன்று நெடுந்தீவின் சொத்தாக மாறியுள்ளது. ஒல்லாந்தரது ஒருசில மரபுரிமைச் சின்னங்கள் சுற்றுலாப் பயணிகளை வியப்பிற்குரியதாகவும், ரசித்துப்பார்க்கத் தூண்டுவதாகவும் உள்ளது. குறிப்பாக புறாக்கூடு நெடுந்தீவில் மட்டும் அமைந்திருந்து ஆய்வாளர்களைப் பல்வேறு வகையிலும் சிந்திக்கத் தூண்டிய வண்ணம் உள்ளது. ஐரோப்பியர் அதாவது ஒல்லாந்தர் மூலமே ஒரு ஆவணப்படுத்தப்பட்ட வெளிச்சமூட்டும் முழுமையான வரலாறு நெடுந்தீவு தொடர்பாக ஏற்படுத்தியதை மேற்கூறிய சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆகவே, ஒல்லாந்தர்கால மரபுரிமைச் சின்னங்களை ஆவணப்படுத்தி அவை தொடர்பாக ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகின்றது. இவ்வாய்விற்கு இலக்கிய, தொல்லியல் சான்றுகளையும் மக்களிடம் மெற்கொள்ளப்பட்ட நேர்காணல்களையும் ஆதாரமாக பயன்படுத்தியுள்ளேன்.

**பிரதான சொற்கள்:** நெடுந்தீவு, ஒல்லாந்தர், மரபுரிமைச் சின்னங்கள், ஆவணப்படுத்தல்

## அறிமுகம்

தென்னாசிய நாடுகளிலே நீண்டதான, தொடர்ச்சியான வரலாற்று பாரம்பரியம் கொண்ட நாடாகவும் இந்துசமுத்திரத்தின் மத்தியிலும், கிழக்கு - மேற்கு வர்த்தகப்பாதையின் முக்கிய மையமாகவும் இலங்கைத்தீவு காணப்படுகின்றது. இங்கு வாழ்ந்து வருகின்ற மக்கள் தமது தீவுசார் சுதேச கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்வதோடு, புவியியல் சார்புநிலையின் அடிப்படையில் இலங்கையின் அண்மைய நாடான இந்தியாவுடன் குறிப்பாகத் தென்னிந்தியாவுடன்(தமிழகம், கர்நாடகம், ஆந்திரா, கேரளம்) கொண்டுள்ள அரசியல், வர்த்தக, கலாசாரப் பண்பாட்டுறவின் காரணமாக அதன் கலாசாரப் பண்பாட்டு விழுமிய அம்சங்களையும் உள்வாங்கியவாறு நாகரீக நிலையில் வளர்ச்சியடைந்துள்ளதைக் காணலாம். இந்த வகையில் இலங்கையின் நாகரீக வரலாறானது தென்னிந்தியாவைப் போன்றே பெருங்கற்காலப் பண்பாட்டுவழி சமுதாயத்தின் மூலமே இலங்கைத்தீவு முழுவதும் ஒரு நிலையான சமுதாயக் கட்டமைப்பையுடைய நாகரீக வரலாறு வளர்ச்சியடைந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதிலும் யாழ்குடாநாட்டின் மனித வரலாற்றின் தொடக்கம் இற்றைக்கு 3000

To whom correspondence should be addressed: varunpons@yahoo.com

[1] Assistant Lecturer, Department of History, University of Jaffna.

ஆண்டுகளுக்கு உட்பட்டதென்பதை கந்தரோடையில் பென்சில்வேனியப் பல்கலைக்கழக தொல்லியல் அகழ்வாய்வுக் குழுவினா் கண்டுபிடித்த தொல்லியல் சின்னங்களை நவீன காலக்கணிப்பிற்கு உட்படுத்தியதிலிருந்து தெரியவந்துள்ளது. இங்கு முதலில் வாழ்ந்த மக்கள் தமிழகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிடர் என்பது மானிடவியலாளர்களின் பொதுவான கருத்தாகும்(புஷ்பரட்னம்,ப,2011,பக்:16-17). குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இம்மக்கள் சமகாலத்திலோ அல்லது சற்றுப்பின்னர் குடியேறியிருக்கலாம் என்பதை ஆனைக்கோட்டை, சாட்டி, களபூமி, குடத்தனை, வெற்றிலைக்கேனி போன்ற இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிசெய்கின்றன.

அவ்வாறே இக்குடியேற்றங்கள் நெடுந்தீவிலும் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் பல உள்ளன. அவற்றுள் நெடுந்தீவுக்கு வடமேற்கே கடற்கரையை அண்டிய வட்டாரத்தில் பரவலாகக் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய பலவகை மட்பாண்ட ஓடுகள், கீச்சுக்கிட்டான்கள், கைவிரல் அடையாளம் கொண்ட கூரை ஓடுகள் முதலானவை சான்றாக உள்ளன. எனினும் இங்கு தொல்லியல் ஆய்வு இதுவரை முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நெடுந்தீவைப் பற்றி ஒழுங்காக ஆவணப்படுத்தப்பட்ட தொல்லியல், இலக்கிய சான்றுகள் அரிதாகவே காணப்படுகிறது. மேலும் இலக்கியங்களை எழுதுபவர்களும் அங்கு மக்கள் மத்தியில் காணப்படுகின்ற ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்டே வரலாறு எழுத வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. ஆனால் இத்தீவு மேலும்பல பண்டையகால வரலாற்று அம்சங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக மத்தியகால நாணயங்கள், பௌத்த எச்சங்கள், சோழர்காலக் கோயில் என்பவற்றைக் கூறலாம். இவை தொடர்ச்சியாக முறையான தொல்லியல் ஆய்வை மேற்கொள்வதன் மூலம் புகைபடர்ந்த ஆதிகால இடைக்கால வரலாறும் நெடுந்தீவின் பூர்வீக மக்கள் யார்? என்ற வினாவிற்கான விடையும், அது அக்காலத்தில் எத்தகைய முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதும் வெளிச்சத்துக்கு வரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இதன் பின்னர் கி.பி 15ஆம் நூற்றாண்டில் வர்த்தகப் போட்டி, சமயப் பரம்பல், நாடுகளைக் கைப்பற்றல் போன்ற நோக்கில் ஐரோப்பியரது வருகையும் அவர்களது ஆட்சியும் இலங்கைத்தீவு முழுவதும் ஏற்பட்டது. இதன் விளைவால் அவர்களது அரசியல், கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் பாரியளவு மாற்றத்தை இலங்கைத்தீவின் சுதேசியப் பண்பாட்டில் ஏற்படுத்தியது. இத்தகைய மாற்றத்தை இலங்கையின் சில பிரதேசங்களில் அதிகமாகக் கண்டுகொள்ள முடிகிறது. குறிப்பாக ஐரோப்பியர்கள் கோட்டை, கொத்தளங்களை அமைத்து பாதுகாப்பு நிலைகளை மேற்கொண்ட இடங்களிலும், அரசியல் நிர்வாக நடைமுறைகளையும் சமய அனுட்டானங்களையும் ஒருமுகப்படுத்தி மேற்கொண்ட இடங்களிலும், இவர்களது வர்த்தக மையங்களிலும், வர்த்தக நோக்கத்திற்காகக் கைக்கொண்ட பிரதேசங்களிலும் ஐரோப்பியரது மேலைத்தேயப் பண்பாட்டுத் தாக்கத்தைப் பெரிதும் அவதானிக்க முடிகிறது. நெடுந்தீவும் இத்தகைய ஐரோப்பியரது ஆதிக்கச் செல்வாக்கிற்கு உட்பட்டது. குறிப்பாக போர்த்துக்கேயர் காலத்திலிருந்து பிரித்தானியர் காலம் வரைக்கும் இவர்களால் ஆட்சிசெய்யப்பட்டது. இவ்வாறு காலத்திற்கு காலம் நெடுந்தீவை ஆட்சிசெய்த ஐரோப்பிய ஆட்சியாளர்களின் பல்வேறு தேவைகள் கருதி தமது கலை, பண்பாட்டுச் சின்னங்களை தீவெங்கும் கட்டமைத்ததோடு அவற்றை ஆவணங்களிலும் பொறித்தனர். இதனால் புகைபடர்ந்த நெடுந்தீவின் வரலாற்றை தெளிவுபடுத்தவதாக இங்கு காணப்படுபடுகின்ற ஐரோப்பிய தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களும், ஐரோப்பிய ஆவணங்களும் விளங்குகின்றன. இத்தீவில் காணப்படுகின்ற ஐரோப்பிய தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களுள் ஏனைய ஆட்சியாளர்களை விட ஒல்லாந்தர்களது தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களே அதிகம் காணப்படுகின்றது. எனவேதான் இக்கட்டுரை நெடுந்தீவிலுள்ள ஒல்லாந்தர் கால தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களை ஆவணப்படுத்தி அவை பற்றி அராய்வதாக அமைந்துள்ளது.

**நெடுந்தீவின் அமைவிடம்**

இலங்கையின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வடமேற்கே அமைந்துள்ளது. இத்தீவானது ‘‘ஆ’’ வுறையூர், பால்த்தீவு, தயிர்த்தீவு,



அபிசேகத்தீவு, மூலிகைத் தீவு, மருத்துவமாவனம், புட்கரம், டெல்வற் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இப்பெயர்கள் யாவும் காரணத்தின் அடிப்படையிலே சூட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இந்துசமுத்திரத்தில் பாக்குநீரிணைத் தொடர்போடு அமைந்திருக்கும் இத்தீவானது யாழ்ப்பாணத்துக்கு வடமேற்கே 45 கிலோமீற்றர் தொலைவிலும், குறிக்கட்டுவான் துறைமுகத்திலிருந்து 8 கிலோ மீற்றர் தூரத்திலும் தென்னிந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழகத்தின் இராமேஸ்வரத்திலிருந்து 32 கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. இத்தீவானது கிழக்கு மேற்காக 8 கிலோமீற்றர் நீளமும் வடக்குத் தெற்காக 6 கிலோமீற்றர் அலகத்தைக் கொண்டு பெரிய இணைகரவடிவில் காணப்படுகிறது. கிட்டத்தட்ட 48 சதுர கிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்ட பிரதேசமாக காணப்படுகின்றது(சிவநாயகமூர்த்தி.சு,20051). இது மேற்கு, தெற்கு பகுதியை இந்துசமுத்திரத்தை எல்லையாகவும் வடக்கு, கிழக்கு பகுதியை வேலணை பிரதேச செயலக பிரிவு எல்லையையும் கொண்டதாக காணப்படுகிறது. இத்தீவானது 1960 களில் 11 கிலோமீற்றர் நீளமும் 8 கிலோமீற்றர் அலகமும் கொண்ட 56 சதுர கிலோமீற்றர்களை உடையதாகக் காணப்பட்டது. பின்னர் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம், சூறவாளி மற்றும் கடலரிப்பு செயற்பாட்டினாலும் நிலப்பரப்பு குறைவடைந்து இன்று 48 சதுரகிலோமீற்றர் அளவுடையதாகக் காணப்படுகின்றது.

நெடுந்தீவானது இன்று இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான கடல்சார் தொடர்புகளில் முரண்பாட்டிற்குரிய கச்சதீவிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்தியா கச்சதீவை இலங்கைக்கு சட்டரீதியாக வழங்க முன்னர் இத்தீவு நெடுந்தீவுக்கு சொந்தமானதாகக் கருதப்பட்டது. உண்மையில் ஆரம்பத்தில் இக் கச்சதீவானது நெடுந்தீவுக்கு சொந்தமாகத்தான் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் நெடுந்தீவு பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்டதும் நெடுந்தீவு மூப்பரைக் கொண்டும் இயங்கிய கச்சதீவு அந்தோனியர் ஆலயமானது ஆரம்பகாலம் தொட்டு இற்றை வரைக்கும் இலங்கை, இந்திய மக்கள் சந்திக்கும் புனித தலமாக விளங்கியதோடு இவ்விரு பிரதேசத்தினரும் தங்களுடைய பண்பாடு, கலாசாரத்தை பரிமாறிக் கொள்ளும் இடமாக விளங்குகின்றது.

**ஒல்லாந்தர்கால மரபுரிமைச்சின்னங்கள்**

நெடுந்தீவு ஆரம்ப காலத்தில் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும் முக்கியத்துவம் பெறுவதற்கு பல காரணங்கள் அடிப்படையாக அமைந்தன. அதாவது யாழ்குடாநாட்டில் உள்ள தீவுகளில் பெரிய தீவாக அமைந்தமை சிறந்த இயற்கையான துறைமுகங்களை கொண்டுள்ளமை(பெரியதுறை), சிறந்த பௌதீக அம்சங்களையும் பசுமையாகவும் காட்சியளித்தமை குறிப்பாக கி.பி 1814இற்கு முதல் கோதுமை கூட விளைந்த இலங்கையின் ஒரேயொரு தீவு என்ற பெருமையும் உண்டு. மற்றும் வரகு, மொண்டி, சாமை, குரக்கன் போன்றவையும் விளைந்தமை சர்வதேசவர்த்தக பாதையில் அதாவது கிழக்கு மேற்கு வர்த்தக பாதையின் மத்தியில் அமைந்திருந்தமையினால் பருவக்காற்றினை பயன்படுத்தி பயணத்தை மேற்கொள்ளமுடிந்தமை மீன்பிடித் தொழிலுக்கு சாதகமான வழிகளை கொண்டுடிருந்ததாகவும் இயற்கை சமநிலை கெடாத வாழ்க்கை முறை அதாவது இத்தீவில் கிடைக்கின்ற வளங்களை பயன்படுத்தி வாழ்ந்தமை (கல்வேலி, பனைவளம்) போன்றவற்றின் காரணமாக இத்தீவுக்கு மக்கள் படையெடுக்கவும், அந்நியர்கள் கைப்பற்றவும் காரணமாக அமைந்தன. போர்த்துக்கீசரின் ஆட்சியோடு நெடுந்தீவில் தொடங்கிய ஐரோப்பியரின் ஆட்சியானது ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலமென மாறிமாறித் தொடர்ந்து இறுதியாக ஆங்கிலேயர் காலத்திலே முடிவடைந்தது. நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலான ஐரோப்பியரியன் ஆட்சியின் சுவடுகளாகப் பல தொன்மையான தொல்லியல் சுவடுகளை நெடுந்தீவு மண் இன்று மரபுரிமைச் சொத்துக்களாக சுமந்து நிற்கின்றது.

போர்த்துக்கேயரை கி.பி 1658இல் வெற்றி பெற்று கி.பி 1796 வரை நெடுந்தீவைத் தமது ஆளுகைக்கு உட்படுத்திய ஒல்லாந்தர்கள் மத ரீதியாகக் கடுமையான அழுத்தங்களை நெடுந்தீவில் பிரயோகிக்காமல் நெடுந்தீவின் கேந்திர முக்கியத்துவத்தை நன்குணர்ந்து தமது நலன்களுக்காகப் பூரணமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். இதனால் தமது நிர்வாக நலன்களை மட்டுமே இலக்காகக்கொண்டு கட்டடங்களை அமைத்தனர். மேலும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண தென்னிந்திய வணிக உறவின் குறுக்கு நிலமாகவும் தொடக்க வாயிலாகவும் நெடுந்தீவு காணப்பட்டதனால் அவர்களின் இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் கேந்திர மையங்களில் ஒன்றாக இத்தீவு விளங்கியது. எனவே இவற்றை நினைவபடுத்துபவையாகவே ஒல்லாந்தர் கால தொல்லியல் மரபுரிமைச்சின்னங்கள் காணப்படுகின்றன.

ஒரு நாட்டின் மரபுரிமையைப் பொதுவாகவே கலாசார மற்றும் இயற்கை அம்சங்களைக் கொண்டு **கலாசார மரபுரிமை**, இயற்கை மரபுரிமை என இரண்டாக வகைப்படுத்தலாம். கலாசார மரபுரிமை என்பது ஒரு குழு அல்லது சமூகத்தால் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்டதும் நிகழ்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும், எதிர்காலத்தில் அடுத்த சந்ததியினரின் நலனுக்காகக் கொடுக்கப்பட வேண்டிய அம்சங்களேயாகும். அதாவது, பௌதீக மற்றும் தொட்டுணரக்கூடிய, தொட்டுணர முடியாத விடயங்களைக் குறிப்பதாகும். இது கட்டடங்கள், வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்கள், நினைவுச் சின்னங்கள், தொல் பொருட்கள், கலைப் பொருட்கள், மக்களது வாழ்வியல் அம்சங்களை உள்ளடக்கியிருப்பதாகும்.

இயற்கை மரபுரிமை என்பது இயற்கைப் பொருட்களையும், தொட்டுணர முடியாத விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. இது ஒரு நாட்டிலுள்ள இயற்கையான தாவரங்கள்(குடழசய), மிருகங்கள்(குயரயெ), புவியமைப்பு, தாதுப் பொருட்கள்(ஆைநெசயடழபைஉயட), பௌதீக, நில, நீர் அம்சங்கள்(புநழஅழசிாழடழபைஉயட), புவி வரலாறு(நுயசவா ர்ளைவழசல) போன்றவற்றைக் குறிப்பதாகும்.

இவ்வகையில் ஒல்லாந்தர்கால மரபுரிமைச்சின்னங்களாக புறாக்கூடு, குவிந்தா வெளிச்சவீடு, குதிரைகள், குதிரை லாயங்கள், குதிரை மூலிகை மருந்துவக்கேணி, பெருக்கமரம், படைவீரர் தங்குமிடங்கள், கேணிகள், வைத்தியசாலை போன்றன ஆய்வாளர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வம்சங்கள் பற்றி விரிவாக நோக்குவோம்.

**புறாக்கூடு**

நெடுந்தீவில் ஒல்லாந்தரது ஆட்சியைச் சிறப்பாக அடையாளப்படுத்தும் ஐரோப்பியர்கால மரபுரிமைச்சின்னங்களில் இன்றும் முக்கியத்துவம்வாய்ந்ததாக விளங்குவது பறவைகள் சரணாலயமெனப்படும் புறாக்கூடு ஆகும். இவ்வமைப்பானது ஒல்லாந்தராட்சி நடைபெற்ற இலங்கையில் அவர்களால் கட்டமைக்கப்பட்ட கட்டட அமைப்புக்களில் நெடுந்தீவைத் தவிர வேறு எந்தப் பகுதிகளிலும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனால் தான் ஒல்லாந்தர்களின் கேந்திர முக்கியத்தும்வாய்ந்த மையங்களில் நெடுந்தீவானது நிர்வாகம், இராணுவக்கட்டமைப்பு போன்ற விடயங்களைப் பற்றி ஏனைய பிரதேசங்களுடன் தொடர்பு கொள்வதற்கான மையமாக இது விளங்கியதென்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

இப்புறாக்கூடானது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் பிரதான கட்டடத்துக்குத் தெற்கே மிகக்கிட்டிய தொலைவில் உள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் குறிப்பாக கி.பி 1602 தொடக்கம் கி.பி 1796 இற்கிடைப்பட்ட காலப்பகுதியில் கட்டப்பட்டதாகச் சான்றுகள் கூறுகின்றன. இது கூழாங்கற்களையும், முருகைக்கல்லையும், சுதையையும், பயன்படுத்தி அமைக்கப்பட்டவையாகும். இக்கூடு காணப்படும் பிரதேசம் ஐரோப்பியர் காலத்தில் நிர்வாக, இராணுவ ரீதியில் முக்கியம் பெற்றதாகக்காணப்படுகிறது. ஆதிகாலத்தில் தகவல் தொடர்பாடலுக்குப் புறாக்களும் பயன்படுத்தப்பட்ட வரலாறுகள் உண்டு. எனவே, ஒல்லாந்தரால் கட்டப்பட்ட இதன் கலைமரபையும், தொழில்நுட்ப அறிவையும், அதனமைப்பையும் நோக்கும் போது இக்கூடு புறாக்கள் வாழ்வதற்கேற்ற வகையில் உள்ளதனால் புறாக்கூடு என அழைக்கப்படுகிறது. இக்கூடு ஏறத்தாள 15 அடி உயரம் கொண்டது. இக்கட்டடத்தின் மேற்தளத்தில் 80 சிறிய அறைகள் கொண்ட புறாக்கள் அல்லது பறவைகள் வசிப்பதற்குரிய கூடுகள் அல்லது கண்துளைகள் காணப்படுகின்றன(இலட்சுமணராசா.நா, 2010:73).



ஒல்லாந்தராட்சியிலும், ஆங்கிலேயராட்சியிலும் தெற்காசியாவின் நிர்வாகத்தின் முக்கியம்பெற்ற மையங்களாக நாகபட்டினம், சென்னை, கோவை போன்றன திகழ்ந்ததோடு, இங்கிருந்தே தென்னாசியாவின் ஏனைய பிராந்தியங்களின் நிர்வாகக் கட்டமைப்புக்கள் மேற்பார்வை செய்யப்பட்டன. இதனால் இந்நகரங்களுக்கும் நெடுந்தீவுக்கும் இடையிலான நிர்வாகம், இராணுவ செயற்பாடுகள் போன்றன தொடர்பான தகவல்களைப் புறாக்கள் மூலம் பரிமாறியிருக்கலாம். இக்கூடு ஐரோப்பியர்காலத்தில் இராணுவ, நிர்வாக இரகசியங்களைப் பெறுவதும், அனுப்புவதுமான மையமாகக் காணப்பட்டதென்ற வரலாறு அங்குள்ள மக்கள் மத்தியில் இன்னும் நிலவுகின்றது. அது மட்டுமன்றி இன்றும் இக்கூடுகளில் இடம்விட்டு இடம்மாறும் புறாக்கள் தங்கிச்செல்வதையும் காணலாம். இவற்றை

அடிப்படையாகக்கொண்டு இப் புறாக்கூடானது ஒல்லாந்தராட்சியில் அயல் பிரதேசங்களுடன் தமது இராணுவ, நிர்வாக தேவைகளுக்காக அமைக்கப்பட்ட புறாக்கூடு தான் பின்னர் பிரித்தானியரால் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு இன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

**வெளிச்சவீடு(குவிந்தா)**

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கையானது இந்தியாவுடனும் கிரேக்க, ரோம, அராபியா மற்றும் தென் கிழக்காசியா, கிழக்காசியா போன்ற நாடுகளுடனும் கொண்ட உறவின் காரணமாக கடல் வழித் தொடர்புகளும் வர்த்தகப் பண்பாட்டு உறவுகளும் அதிகரிக்கலாயின. இத்தொடர்புகளை பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும் பிறநாட்டார் குறிப்புக்களும், கடற்கரை நகரங்கள், வர்த்தக மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல் பொருட்சான்றுகளும் ஆதாரப்படுத்துகின்றன. அக்காலத்தில் கடல்வழித் தொடர்புகளையும் கடல்கடந்த வணிகத்தில் ஈடுபடுவதற்கு படகு, தோணி, பாய்க்கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. இவை திசைமாறாது குறிப்பிட்ட இடத்தை அடைவதற்காகத் துறைமுகத்தின் ஓர் குறிகாட்டியாக வெளிச்சவீடு காணப்படுகிறது. இது பண்டையகாலத்திலே இருந்தது என்பதற்கு **இளங்கோவடிகளின்** சிலப்பதிகாரத்தில் "இலங்கு நீர் வரைபில் களங்கரை விளக்கம்.." எனக் குறிப்பிட்டத்திலிருந்து ஆரம்ப காலங்களிலே முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பது புலனாகிறது.



ஆரம்பகாலம் தொட்டு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல துறைமுகங்களை கொண்ட இலங்கை ஐரோப்பியராட்சிக்கு உட்பட்டது. இவர்கள் கடல் போக்குவரத்து, பாதுகாப்பு, வர்த்தக நோக்கம் கருதி கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த துறைமுகங்களில் வெளிச்சவீடுகளை இலங்கையின் பல பகுதிகளிலும் அமைத்தனர். இவ் ஐரோப்பியர்களில் ஒல்லாந்தர்களே அதிகளவான வெளிச்சவீடுகளை அமைத்துள்ளனர் என்பதை ஒல்லாந்த ஆவணங்களும் இன்றும் எஞ்சியுள்ள வெளிச்சவீடுகளும் சான்றுபகர்கின்றன. இவற்றில் ஒன்றே நெடுந்தீவின் தென்மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட வெளிச்சவீடு காணப்படுகிறது. இன்றும் அழிவடையாது ஒல்லாந்தர்காலத் தொழில்நுட்பத்தைப் பிரதிபலிக்கும் இவ் வெளிச்சவீடு **குவிந்தா அல்லது குயின்ஸ் ரவர்** என அழைக்கப்படும். இது ஒல்லாந்தர்கால ஆட்சியின் சின்னமாகவே அமைந்துள்ளது(குகபாலன்.கா, 2000:75). இவ் வெளிச்சவீடு காணப்படும் பகுதி ஒல்லாந்தர் காலத்தில் பாரிய துறைமுகமாகக் காணப்பட்டதென தொல்லியலாளர்கள் எடுத்துரைக்கின்றனர். அதுமட்டுமன்றி அங்குள்ள மக்கள் இப்பகுதி ஆழம் குறைந்த முருகைக் கற்பாறை கடற்கரையாதலால் இது துறைமுகமெனவும் இது நெடுந்தீவின் வருகையையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டதென கூறுகின்றனர். எது எவ்வாறெனினும் வெளிச்சவீடானது பொதுவாகவே துறைமுகத்தை அடையாளப்படுத்தி கப்பல் கரைசேர்வதற்காக அமைக்கப்படுவதாகும். எனவே, இக் குயின்ஸ் ரவர் காணப்படும் பகுதி ஒல்லாந்தர் காலத்தில் மிகப்பெரிய துறைமுகமாக இருந்திருக்க வேண்டும் அல்லது இதன் அருகில் ஏதாவதொரு துறைமுகம் கட்டாயம் இருந்திருக்கவேண்டும்.

குவிந்தா ஆரம்பத்தில் ஒல்லாந்தரால் சுண்ணாம்பு அல்லது முருகைக்கல்லால் கட்டப்பட்டது. குவிந்தா என்றால் ஒல்லாந்து மொழியில் நல்வரவு என்ற அர்த்தம் கொள்ளப்படுகின்றது(கணபதிப்பிள்ளை.மா,2014,26). நெடுந்தீவுமக்கள் இவ் வெளிச்சவீட்டையும், இது காணப்படும் பகுதியையும் குவிந்தா என அழைக்கப்பட்டு வருவதனைக் காணலாம். ஒல்லாந்தரின் ஆட்சியின் பின்னர் வருகைதந்த பிரித்தானியரால் இவ்வெளிச்சவீடு மீண்டும் திருத்தப்பட்டு குயின்ஸ் ரவர் எனப்பெயர் மாற்றப்பட்டது. அத்துடன் ஆங்கிலேயர் தமது கொடியை இதன்மேலே பறக்க விட்டனரெனவும் இதனால் இங்குள்ள சுதேசிகளுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே முரண்பாடுகளும் தோன்றின என்ற வரலாறும் காணப்படுகிறது.

குவிந்தா பரந்த வெளியில் பகல் நேரத்தில் வெள்ளை நிறமாகக் காணப்பட்டதனால் பரந்த கடற்பரப்பில் தொலைதூரத்தில் வருகின்ற கப்பல்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கியது. இங்கு பல கப்பல்கள் பருவக்காற்றுக்களைப் பயன்படுத்தி ஒதுங்குவதற்கும் பயணத்தைச் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் வெளிச்சவீட்டின் முக்கிய அம்சம் அல்லது தொழில்நுட்பம் என்னவெனில் அதன்

அடிப்பாகத்திலிருந்து நடுவிலுள்ள துளைவழியாக கடதாசி போன்ற பாரம்குறைந்த பொருட்களை வீசும்போது அவை காற்றழுத்தஅமுக்கவிசையின் காரணமாக குயின்ஸ்ரவரின் மேலே இழுத்துச் செல்லப்படுவதாகும். குவிந்தாவை ஒத்ததன்மையிலே பூநகரி வெளிச்சவீடும், இன்று எஞ்சியுள்ள புங்குடுதீவு வெளிச்ச வீட்டின் அடித்தளமும் காணப்படுகிறது.

**குதிரைகள்**

நெடுந்தீவில் ஐரோப்பிய காலனித்துவத்தின் சான்றுகளை வெளிப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக நெடுந்தீவின் குதிரைகள் காணப்படுகின்றன. இக் குதிரைகள் இன்றும் ஒல்லாந்தர்களின் ஆட்சி நெடுந்தீவில் நிலவியதையே புலப்படுத்துவதாக உள்ளது. நெடுந்தீவுக்கு குதிரைகள் ஒல்லாந்தராட்சி இங்கு நடைபெற முன்னரே வடஇலங்கையுடன் வர்த்தக நடவடிக்கையினை மேற்கொண்ட அரேபியர்கள் இங்கு தங்கியிருந்த போது முதன் முதலாகக் கொண்டுவரப்பட்டது என்ற கருத்தும் இத்தீவு மக்களிடையே காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி தென்னிந்தியாவில் மணிவாசகரின் காலத்தில் அவர் குதிரை வாங்குவதற்கு வருகைதந்த இடம் இவ் நெடுந்தீவிலுள்ள பெரியதுறை என்ற கருத்து இன்றும் நிலவுகின்றது. ஏனெனில் நெடுந்தீவு தமிழக இராமேஸ்வரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளதனால் நெடுந்தீவிற்கும் தமிழகத்திற்கும் சங்ககாலத்திலிருந்து தொடர்பிருந்ததாக சான்றுகள் குறிப்பிடுகின்றன. அதுமட்டுமன்றி பெரியதுறைக்கருகில் சோழர்கால சிவன்கோயிலும் சோழ மன்னரது நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே இத்தீவிலுள்ள பெரியதுறையே மணிவாசகர் காலத்தில் திருப்பெருந்துறை என அழைக்கப்பட்டு இன்று பெரியதுறையாக மருவியுள்ளதென்ற நம்பிக்கை நிலவுகின்றது.



நெடுந்தீவில் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் ஒன்று முதல் இரண்டரை வயதுள்ள குதிரைக் குட்டிகள் வளர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனாலும், ஒல்லாந்தர் காலத்தில் சிறப்பாகக் குதிரைகள் வர்த்தகத்திற்காகவும், போக்குவரத்திற்காகவும் யாவா, பாரசீகம், அரேபியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ததோடு வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனால் ஒல்லாந்தர் காலத்தில் குதிரைகள் அதிகம் நெடுந்தீவில் வளர்க்கப்பட்டது. இதனால் இத்தீவில் குதிரைக்காக குதிரை லாயங்கள், குதிரைக்கான மூலிகை மருத்துவக்கேணி, பெருக்குமரம் போன்றன ஒல்லாந்தரால் குதிரை வளர்ப்பினை சிறப்பாக மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டன. அத்துடன் இயற்கையாகவே நெடுந்தீவானது இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட குதிரைகள் வாழ்வதற்கான சூழலையும் கொண்டிருந்தது. இதன் விளைவு நெடுந்தீவில் குதிரைகள் ஒல்லாந்தரினால் அதிகம் வளர்க்கப்பட்டு அவர்களின் மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக விளங்கியதோடு, இன்று நெடுந்தீவின் சின்னமாகவும் அடையாளமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஒல்லாந்தரது ஆட்சியைத் தொடர்ந்து நெடுந்தீவைக் கைப்பற்றிய பிரித்தானியர்கள் ஒல்லாந்தரால் கைவிடப்பட்ட குதிரைகளை பராமரிப்பதற்காக **ஒன்டர், கூப்மன்** போன்ற பதவிகளில் அதிகாரிகளை நியமித்தினர். குறிப்பாக கி.பி 1798இல் குதிரை வண்டிக்கான பொறுப்பு வருமான அதிகாரியான பார்புற் என்பவரிடமும், 1816இல் சன்கோணி குதிரை வளர்ப்பதற்காகவும், 1826இல் அதேட்டன் என்பவரிடம் வழங்கப்பட்டதாக ஆங்கிலேயரது குறிப்புக்களில் காணப்படுகின்றன. எனினும், பிரித்தானியராட்சி முடிவுற்றதும் குதிரை வளர்ப்பும் கைவிடப்பட்டு இன்றுபோல் பரந்த பற்றைக்காடுகளிலும் புல்வெளிகளிலும் வளரத்தொடங்கின.

சமகாலத்தில் நெடுந்தீவின் பிரதேச செயலகத்தின் கொடியிலும் நகர வளைவிலும் குதிரைச் சின்னம் இடம்பெற்றிருப்பதானது நெடுந்தீவின் முக்கிய மரபுரிமையம்சமாகவும், அரசாங்கத்தின் சொத்தாகவும் மாற்றப்பட்டுள்ளமை புலனாகின்றது. அதுமட்டுமல்லாமல் இலங்கையின் முதன்முதலாக பிரகடனப்படுத்தப்பட்ட குதிரைகள் சரணாலயம் அமைக்கப்பட்ட பெருமைக்குரிய பிரதேசமாக நெடுந்தீவு விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். ஒல்லாந்தராட்சியில் பெரிய குதிரைகளே கொண்டுவரப்பட்டது. காலம் செல்லச்செல்ல இங்கு தரைத்தோற்றம் மற்றும் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் குதிரைகளிலும் தாக்கத்தை செலுத்தியது. இதனால் உருவம் சிறுத்து **போனீஸ்** என்றும் சிறப்பாக அழைக்கப்படும் குதிரை இனங்களே இன்று

இத்தீவெங்கும் உள்ளது. பிரித்தானியர் காலத்தில் அரேபியா, பேர்சியா முதலிய நாடுகளிலிருந்து குதிரை முகவர் நிலையங்கள் மூலம் இத்தீவிற்குக் கொண்டுவரப்பட்டு குதிரைப் பந்தயங்கள் நடாத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இன்று நெடுந்தீவில் 1500 இற்கும் 1750 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலான குதிரைகள் வெல்லைவெளி, நெடுந்தீவு கிழக்குப் பகுதியிலுள்ள காடுகளிலும் காணப்படுகின்றன. இங்குள்ள குதிரைகளை இத்தீவை விட்டு எங்கேயும் கொண்டுசெல்லமுடியாது. அவ்வாறு கொண்டு செல்வதென்றால் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் அனுமதியினைப் பெறவேண்டும். எனினும் தகுந்த காரணமின்றி அனுமதி வழங்கப்படுவதில்லை. நெடுந்தீவின் சொத்தாக போற்றப்படுகின்ற குதிரைகளை நெடுந்தீவு மக்களில் சிலர் தமக்குச் சொந்தமாகத் தங்களது பெயர்க் குறிகளைக் குதிரைகளில் பொறித்து வளர்த்து வருகின்றனர். அத்துடன் காடுகளில் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு ஆண்டு தோறும் குதிரைப்பந்தயப் போட்டிகளையும் நெடுந்தீவு மக்கள் நடாத்திவருவதையும் காணலாம்.

**குதிரை மூலிகை மருத்துவக்கேணி**

ஒல்லாந்தராட்சிக் காலப்பரப்பிலே இலங்கையில் உருவாகிய மரபுரிமைச் சின்னங்களிலே நெடுந்தீவைத் தவிர வேறெங்கும் காணமுடியாத அல்லது நெடுந்தீவிற்குச் சிறப்புச் சேர்க்கும் வகையிலே அமைந்துள்ள மரபுரிமைச் சின்னமாக இம் மருத்துவக்கேணி காணப்படுகின்றது. நெடுந்தீவு கிழக்குப் பகுதியிலே குதிரைகளின் செறிவுமிக்க காட்டுப்பகுதியில் இக்கேணி அமைந்துள்ளமையானது இது குதிரைகளுக்கு சிகிச்சையளிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது. நீண்ட ஓடை போன்ற அமைப்பைக் கொண்டு ஒடுங்கிய கேணி போன்ற தோற்றத்திலுள்ளதுடன் முன்புறத்தே சதுரவடிவிலான ஒரு தொட்டிபோன்ற அமைப்பும் காணப்படுகின்றது. இத்தொட்டி அல்லது கேணியின் அமைப்பானது ஒல்லாந்தரின் தொழில்நுட்ப ரீதியான அறிவையெடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.



இவ்வகையில் ஓடை போன்ற தொட்டியமைப்பானது காயம், நோய்வாய்ப்பட்ட குதிரைகள் போன்றவற்றிற்கு இலகுவாக உடல் முழுவதும் மூலிகை நீரை வீணாகாமல் பூசுவதற்காக அமைக்கப்பட்டதாகும். இவ் ஓடை போன்ற அமைப்பின் முன்புறத்தேயுள்ள சதுர வடிவான சிறிய நீர்த் தொட்டியில் மூலிகைச்சாறுகள் கலக்கப்பட்டு அதனூடாக மூலிகைகள் கேணிக்குள் நீருடன்சேர்த்து நிரப்பப்பட்டுப்பின்னர் குதிரைகள் ஒன்றன்பின்னர் ஒன்றாக இக்கேணி அமைப்பினுள் உடல் முழுவதும் மூழ்கி மீளும் தன்மையில் குதிரைகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டதாக இப்பகுதி மக்கள் நம்புகின்றனர். இக்கருத்தையே இங்குள்ள மக்களும் இக் கேணியைப் பற்றி வினாவும் போதும் எடுத்துரைக்கின்றனர். இக் கேணியருகே குதிரைலாயங்கள், குடியிருப்புக்கள் இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றமையால் இது குதிரைகளுக்கான மருத்துவம் செய்யப்பட்ட மருத்துவக்கேணியாகவே இருக்கலாம்.

**குதிரை லாயம்**

ஒல்லாந்த ஆட்சியாளர்களால் குதிரையைச் சிறப்பாக வளர்த்தமைக்கு ஆதாரமாக விளங்குவதே குதிரை லாயமாகும். இது நெடுந்தீவு மேற்கில் அமைந்துள்ளது. குதிரைகளை முறையாகப் பராமரிப்பதற்காகவே அமைக்கப்பட்டது. குதிரைகள் பகல் நேரம் முழுவதும் தரவைகளில் மேய்ந்து இரை தேடிய பின்னர் மாலை நேரத்தில் வந்து தங்குவதற்காகக் குதிரைலாயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. முருகைக்கற்களோடு சுண்ணாம்பு, கற்றாளை, சர்க்கரை, தேன் போன்றவற்றினைப் பயன்படுத்தி கட்டப்பட்டமையை இன்றுள்ள எஞ்சிய அழிபாடுகள் எமக்குப் படம்பிடித்துக்காட்டுகின்றன. குதிரைகள்



வந்து தங்குவதற்காக எண்ணற்ற தூண்கள் அகலமானதாக முறைப்படி அமைக்கப்பட்டன. இந்த லாயத்தில் ஒவ்வொரு குதிரையும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட தூண்களுக்கு அருகில் வந்து தூங்கியதாக செவிவழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இங்கு காணப்படும் தூண்கள்கள் ஏன் அகலமாக அமைக்கப்பட்டதெனில் குதிரைகளின் உடலில் ஏற்படும் ஒரு வகைக் கடி போன்ற துயர்கள் ஏற்படும் போது இச் சுவர்களில் உடலைத் தேய்த்து சுகம்பெறும் என்பதற்காகவே ஆகும்.

குதிரைகள் உணவருந்தும் இடங்களில் நாகதாளிச்செடிகளும், ஈச்சம் பற்றைகளும் சிறுதாவரங்களும் காணப்படும். இவ்லாயத்தை உற்றுநோக்கும் போது ஒல்லாந்தர்கள் குதிரைகளின் மலம், சலம் என்பவற்றினால் குதிரைகளுக்குச் சலனமேற்படாத வகையில் அமைக்கப்பட்டிருந்தமையைக் காணலாம். மேலும், குதிரைலாயங்களின் மத்தியபகுதி ஆமையின் முதுகு போன்று அமைக்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட இவ்லாயம் 150அடிக்கு மேலாக அமைக்கப்பட்டிருப்பதானது குதிரை வளர்ப்பின் மீது ஒல்லாந்தர் அக்கறை கொண்டவர்கள் என்பதை புலப்படுத்துவதோடு, இக்கட்டடத்தில் தமது தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்தி எமக்கு விட்டுச்சென்றிருப்பதனைக் காணலாம்.

**படைவீரர்கள் மனை**

ஒல்லாந்தர்காலப் படைவீரர்களின் இருப்பிடமும் ஒல்லாந்தர் கால மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ் இருப்பிடம் ஜெற்றியிலிருந்து மேற்காக 3மஅ தொலைவில் பிரதான வீதியின் வலப்பக்கத்திலும், தற்போதைய வைத்தியசாலையின் தெற்குப் பக்கத்திலும்



அமைந்துள்ளதுடீரளியசயவயெஅ.இ 2014:140). இவ் விருப்பிடம் முற்று முழுதாக முருகைக் கற்களால் கட்டப்பட்டதாகும். இங்கு காணப்படும் சுவர் கரையோரமாகப் படைவீரர்களின் இருப்பிடமாக இருக்கலாம் என்பதற்குண்மையான ஆதாரங்களும் காணப்படுகின்றது. குறிப்பாக இரண்டு சுரங்கவழிகள், பழுதடைந்த நிலையிலுள்ள படைவீரர் குடியிருப்புக்களும் உள்ளன. எனினும் இன்று இவ்வம்சங்கள் போதிய மரபுரிமைப் பாதுகாப்பு இன்மையால் இவ்வம்சத்தின் சுவர்க்கட்டடங்கள் இடிந்த நிலத்தில் வீழ்ந்துள்ளமையைக் காணலாம்.

**பெருக்கு மரம்**

ஒல்லாந்தர்கள் நெடுந்தீவின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்தக் கடலின் வல்லாதிக்கத்தை நிலை நிறுத்த முனைந்த பல தேசங்களின் ஆக்கிரமிப்பாளர்களும், வியாபாரிகளும் வந்து சென்ற, வாழ்ந்த இடமாகவும், குதிரைகளுக்கு உணவாகவும், மருத்துவத் தாவரமாகவும் தொன்ம அடையாளப் பரம்பலை விபரித்துச்செல்லும் மரமாகவும் பெருக்குமரம் காணப்படுகிறது. இம்மரம் நெடுந்தீவின் கிழக்குப்பகுதியில் ஜெற்றியிலிருந்து தென்மேற்காக 3மஅ தொலைவில் காணப்படுகிறது. இலங்கை நிலத்திற்கும் சற்றும் பொருந்தாத மிக அரிதான ஒரு தாவரவகையாகும். இதனை ஆங்கிலத்தில் டியழடியடி வசநந என அழைப்படுகின்றது, இன்று இம்மரங்ககள் நெடுந்தீவு மற்றும் மன்னாரிலும் குறிப்பாக மன்னார் நகரப்புறத்தில் இருக்கின்ற ஒல்லாந்து கோட்டைப்பகுதியை அண்மித்த சூழலில் காணப்படுகின்றது.

பெருக்கமரமானது ஐரோப்பியர்களால் ஆபிரிக்க தேசமான **மடகாஸ்காரிலிருந்து** கொண்டுவந்து குதிரைகளின் உணவு மற்றும் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே மரங்களைப் பயிரிட்டதென்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன. எனினும், முதலியார் இராசநாயகத்தின் குறிப்பின்படி இப் பெருக்கமரங்கள் ஆரம்பகால அரேபியர்களால் குதிரைகள் வர்த்தகத்திற்காக இங்கு கொண்டுவரப்பட்டபோதும்



அவ்விலங்குகளின் உணவிற்காக இப்பெருக்கமரங்களும் கொண்டுவந்து நடப்பட்டதாகக் கூறுகின்றார்(ரளியசயவயெஅ.:இ 2014:165). அரேபியர்களால் இம்மரம் கொண்டுவரப்பட்டது என்றாலும் இம் மரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தியவர்கள் ஐரோப்பியர்களான ஒல்லாந்தர்களேயாவார். இவர்கள் காலத்தில் தான் இங்கு குதிரைகள் அதிளவில் ஏற்றுமதிசெய்து வளர்க்கப்பட்டுப் பின்னர் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் இவர்களது வரலாற்றுக்குறிப்புக்கள் குறிப்பிடுகின்றன.

இன்று நெடுந்தீவில் ஒல்லாந்தர்களின் காலணித்துவத்தையும் 350 அல்லது 400 ஆண்டுகள் இயற்கை மரபுரிமைச் சின்னமாகக் காணப்படுகிறன்றது. இப்பெரிய பெருக்கமரமானது 18அ உயரமும் 9அ வரையிலான விட்டமும் குறுகிய கிளைகளை உடையதாகவும் காணப்படுகின்றது. இம்மரத்தைக் கிட்டத்தட்ட 20 மனிதர்கள் இரண்டு கைகளையும் சேர்த்துச் சங்கிலி போலக் கொழுவிக் கட்டிப்பிடித்தால் தான் இதனடியைப் பிடிக்கக்கூடியதாக உள்ளது. இம்மரத்தின் அடியில் காணப்படும் பொந்தில் பலர் பதுங்கியிருக்கக்கூடிய பெரிய குகை போன்ற அமைப்பையும் கொண்டுள்ளது. இப்பெருக்குமரத்தைத் தவிர நெடுந்தீவின் கிழக்குக் கரையோரக் கடற்கரையை அண்டி மற்றொரு வகையான பெருக்கமரங்களும் அதிகளவில் காணப்படுகின்றது. பெருக்குமரம் நீண்டகாலம் நீரைச் சேமித்து வாழக்கூடியதாகும். இதனால் தான் நெடுந்தீவில் இன்றும் இம்மரம் வாழ்ந்துவருகின்றது. இம்மரத்தின் இலைகளையும், பட்டையையும் குதிரைகளுக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

**ஒல்லாந்தர்காலக் கேணிகள்**

நெடுந்தீவில் ஐரோப்பியர்கால மரபுரிமைச் சின்னங்களில் ஒல்லாந்தர்களால் கட்டமைக்கப்பட்ட கிணறுகள் அல்லது கேணிகளும் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் அதிவரண்ட பிரதேசமான நெடுந்தீவு நீண்டகாலம் வரட்சியாகவே காணப்படும். எனவே, குதிரைகள், மாடுகள், தண்ணீர் குடிப்பதற்காக ஏராளமான கேணிகள் ஒல்லாந்தர்களால் கட்டப்பட்டதென்ற குறிப்புக்கள் உள்ளன. இதனடிப்படையில் ஒல்லாந்தரால் முருகைக் கல்லால் கட்டப்பட்ட ஒரு கேணி தற்போது பிரதேசசபை தங்கும் விடுதிக்கருகில் காணப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கேணிகளில் குதிரைகள், மந்தைக் கூட்டங்கள் நீரருந்திச் சுகமாக வாழ்ந்ததாக மக்கள் குறிப்பிடுகின்றனர். இக் கேணி அமைப்பானது ஆரம்ப காலங்களில் இருந்து இத்தீவில் அதிகமாக அமைக்கப்பட்டிருந்தமையைக் இத்தீவெங்கும் பரந்து காணப்படுகின்ற பாழடைந்த கேணிகள் சான்றுபகர்கின்றன.



**வைத்தியசாலை**

நெடுந்தீவு மத்தியில் ஒல்லாந்தர் கால வைத்தியசாலை என்பது தற்போது போர்த்துக்கேயரது கோட்டையின் கரையோடு அல்லது கோட்டைக்கு ஒல்லாந்தரது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முருங்கைக் கற்களைக்கொண்டு அமைக்கப்பட்டாலும் இன்று அதனுடைய உருவில் பாரியமாற்றத்தைக் கொண்டுள்ளதைக்காணலாம்.

**நிறைவுரை**

இவ்வாய்வினைத் தொகுத்து நோக்குகின்ற போது நெடுந்தீவானது யாழ்குடாநாட்டின் சப்ததீவுகளில் முக்கியத்தும்பெற்றதாக விளங்கியதோடு மட்டுமன்றி வட இலங்கையின் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த நிர்வாக, வர்த்தக மையமாகவும் தனது அமைவிட காரணிகளாலும் பௌதீகச் செல்வாக்கினாலும் ஆதிகாலந்தொட்டு இன்றுவரை மக்கள் வாழ்ந்துவரும் தீவாகக்காணப்படுகிறது. இதனால்தான் நெடுந்தீவானது நீண்டதீவு மட்டுமல்ல அதற்கொரு நீண்ட பாரம்பரிய வரலாற்றையும் கொண்டுள்ளது என்பதனை அங்கு சிதைவுறும் நிலையில் காணப்படும் தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. நெடுந்தீவைப் பற்றி ஒழுங்காக ஆவணப்படுத்தப்பட்ட இலக்கியங்கள் அரிதாகவே காணப்படுகிறது. அவ்வாறே தொல்லியல் ஆய்வும் இங்கு முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால்

இலக்கியங்களை எழுதுபவர்களும் அங்கு மக்கள் மத்தியில் காணப்படுகின்ற ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்டே வரலாறு எழுத வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் ஒரு பாரம்பரிய வரலாற்றின் உண்மைத் தன்மை ஐரோப்பியராட்சி நெடுந்தீவில் ஏற்படும் வரை புகைபடர்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. ஆனால் இத்தீவு பண்டையகால வரலாற்று அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. குறிப்பாக பெருங்கற்கால மட்பாண்ட ஓடுகள், கீச்சிட்டான்கள், மத்தியகால நாணயங்கள், பௌத்த எச்சங்கள், சோழர் கால கோயில் என்பவற்றைக் கூறலாம். இவை தொடர்பாக முறையான தொல்லியல் ஆய்வை மேற்கொள்வதன் மூலம் புகைபடர்ந்த நெடுந்தீவின் ஆதிகால இடைக்கால வரலாறு வெளிச்சத்துக்குவரும்.

ஐரோப்பியர் ஆட்சி நெடுந்தீவில் இடம் பெற்று இற்றைக்கு 400 ஆண்டுகளைக் கடந்துள்ள போதும் அவர்களால் அமைக்கப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள் அழிவடைந்தாலும் ஐரோப்பியரது வரலாற்றை தெட்டத்தெளிவாக வெளிச்சமூட்டுகின்றது. குறிப்பாக ஒல்லாந்தரது வரலாற்று நினைவுச்சன்னங்களே அத்தீவெங்கும் பரந்து காணப்படுவதோடு பார்ப்பவர்களையும் கவர்வதாக உள்ளது. ஓல்லாந்தர் காலத்தில் நெடுந்தீவு பெற்ற முக்கியத்துவத்தினால் இத்தீவிற்கே உரிய சில மரபுரிமைச் சின்னங்களை கட்டமைத்துவிட்டு சென்றாலும் அவை இன்றும் மக்களால் பேணப்பட்டே வருகின்றது. குறிப்பாக குதிரை, அவற்றுடன் தொடர்புடைய குதிரைலாயம், மூலிகை மருத்துவக்கேணி, பெருக்குமரம், புறாக்கூடு, குவிந்தா போன்றன குறிப்பிடத்தக்கதாகும். மேலும், மரபுரிமைச் சின்னங்கள் முழுமையாக ஒல்லாந்தரது கலைப்பாணியையும் தொழிநுட்ப அறிவையும் பிரதிபலிப்பதாகவே உள்ளன. இன்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவிற்கு அதிகளவில் வருகைதர காரணம் ஒல்லாந்தரது மரபுரிமைச் சின்னங்களை பார்வையிடும் நோக்கிலேயாகும். இவர்களால் கொண்டுவரப்பட்ட குதிரைகள் இன்று நெடுந்தீவின் சொத்தாக மாறியுள்ளது. ஒல்லாந்தரது ஒருசில மரபுரிமைச் சின்னங்கள் சுற்றுலாப் பயணிகளை வியப்பிற்குரியதாகவும், ரசித்துப்பார்க்கவும் தூண்டுவதாகவும் உள்ளது. குறிப்பாக புறாக்கூடு நெடுந்தீவில் மட்டும் அமைந்திருந்து ஆய்வாளர்களைப் பல்வேறு வகையிலும் சிந்திக்கத் தூண்டிய வண்ணம் உள்ளது. ஐரோப்பியர் அதாவது ஒல்லாந்தர் மூலமே ஒரு ஆவணப்படுத்தப்பட்ட வெளிச்சமூட்டும் முழுமையான வரலாறு நெடுந்தீவு தொடர்பாக ஏற்படுத்தியதை மேற்கூறிய சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. எனினும் ஒரு முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளும் பட்சத்தில் மேலும் பல ஐரோப்பியர் மரபுரிமைச் சின்னங்களோ, பூர்வீக மக்கள் தொடர்பான மரபுரிமைச் சின்னங்கள், வரலாறுகள் வெளிச்சத்திற்கு வரும் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை.

**உசாத்துணை நூல்கள்**


1. குகபாலன்.கா, 2000, தீவகம் பல்துறைநோக்கு, புவியியற்துறை யாழ்பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
2. குகபாலன்.கா, 1994, தீவகம் வளமும் வாழ்வும், தீவகக்கோட்டக் கூட்டுறவு ஒன்றியம்.
3. புஸ்பரட்ணம்.ப, 2000, தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, குமரன் பதிப்பகம், சென்னை.
4. புஸ்பரட்ணம்.ப, 2010, ''யாழ்ப்பாணத்து தொல்பொருள் மரபுரிமைச்சின்னங்கள்'', வரலாற்று உலா, (ப.ஆ), நடராசா, ஆ.சி. சிவத்தமிழ் மானிட விடியற்கழகம்.
5. புஸ்பரட்ணம்.ப, 2010, ''நெடுந்தீவில் சுற்றுலாவிற்குரிய தொல்லியல் சின்னங்கள்'', வரலாற்று உலா, (ப.ஆ), நடராசா, ஆ.சி.சிவத்தமிழ் மானிட விடியற்கழகம்.
6. சிவநாயகமூர்த்தி.சு, 2003, நெடுந்தீவு மக்களும் வரலாறும், விவேகா அச்சகம், ரொறன்ரோ.
7. இலட்சுமணராசா.ந, 2010, நெடுந்தீவு சிதையும் சின்னங்கள், கங்கை பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.
8. சிற்றம்பலம்.சி.க, 1993, யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, யாழ்பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.
9. இராசநாயகம்.செ, 1999, யாழ்ப்பாணச் சரித்திரம், ஏசியன் எடுகேவின் சர்வீஸ், புதுடில்லி, சென்னை.
10. கிருஸ்ணராசா.செ, 1998, இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும், பிறைநிலா வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.
11. Nelson, William.A, 1984, Dutch forts of SriLanka, Littlehampton book services ltd:illustrated edition.

12. Philip Baldaeus, 1998, A description of the great an most famous Isle of Ceylon, New Delhi.
13. Peris.P.E, 1922, "Nagadipa & Buddhist remains in Jaffna part - 1", In Journal of the Royal Asiatic Society Ceylon branch.
14. Pusparatnam.P, 2012, (ED), Jaffna lifestyle, Published by express newspapers(PVT), Colombo

**இதழ்கள்**

1. கலைக்கேசரி – March, 2014.
2. கலைக்கேசரி – April, 2014.
3. கலைக்கேசரி – May, 2014.
4. கலைக்கேசரி – June, 2014.
5. கலைக்கேசரி – July, 2014.
6. கலைக்கேசரி – August, 2014.
7. கலைக்கேசரி – September, 2014.
8. கலைக்கேசரி – October, 2014.
9. கலைக்கேசரி – November, 2014.
10. கலைக்கேசரி – December, 2014.
11. கலைக்கேசரி – October,2011.